
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1275

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

121

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# நீட் எதிர்ப்பு: தி.மு.க.தான் என்றும் முதன்மையான இயக்கம்!




***நீட் தேர்வு மோசடிகளை எதிர்த்து, இளைஞர்கள் நடத்திய போராட்டத்தில் தி.மு.க. புகுந்து அதனைத் தனதாக்கிக் கொள்ளப் பார்த்தது என்று, த.வெ.க. அமைச்சர்கள் குற்றம் சாட்டுகிறார்களே?***

நீட் தேர்வே மோசடிதான். அது அறவே நீக்கப்பட வேண்டும் என்ற போராட்டத்தைத் தொடங்கியதே தி.மு.க.தான் என்ற உண்மை வரலாற்றைப் பொய்யர்களான த.வெ.க. அமைச்சர்கள் ஒருபோதும் உணர மாட்டார்கள். நீட் தேர்வு வினாத்தாள் கசிவுக்குக் காரணமான அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி, டெல்லி ஜந்தர் மந்தரில், 'கரப்பான்பூச்சி ஜனதா கட்சி'யினர் தொடர் போராட்டம் நடத்தினார்கள்.

நீட் தேர்வு பற்றி இந்திய இளைஞர்களுக்கு மெதுவாகப் புரிதல் ஏற்படுவதை உணர்ந்து, அந்தப் போராட்டக் களத்தில் தி.மு.க. தனது ஆதரவைத் தெரிவித்தது. ஜந்தர் மந்தரில் சமூகச் செயற்பாட்டாளர்-சூழலியல் ஆர்வலர் சோனம் வாங்சுக் உண்ணாவிரதம் இருந்தபோது, தி.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. நேரில் சென்று ஆதரவளித்தார். அதனைத் தொடர்ந்து இளைஞர்களின் போராட்டத்திற்கு, தி.மு.கவின் துணைப் பொதுச்செயலாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி எம்.பி. ஆதரவளித்து உரையாற்றினார். அந்த உரையிலும், நீட் தேர்வை ரத்துசெய்ய, தி.மு.க. மேற்கொண்ட சட்டமன்றத் தீர்மானங்கள், சட்டரீதியான முயற்சிகள் குறித்து, இளைஞர்களுக்குத் தெரிவித்தார்.

டெல்லியில் இளைஞர்கள்-மாணவர்கள் எழுச்சியைத் தொடர்ந்து, பல மாநிலங்களிலும் போராட்டக் களங்கள் உருவாகின. தமிழ்நாட்டில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகமான சென்னை,'பாலன் இல்லத்தில்' இளைஞர்களும் மாணவர்களும் போராட்டத்தில் இறங்கினர். இதில் கட்சி வேறுபாடுகளைக் கடந்து பலரும் கலந்துகொண்டனர். தி.மு.க.வின் ஜென்ஸி தலைமுறையினரும் பங்கேற்றனர். இந்தப் போராட்டத்திலும் தி.மு.க. சார்பில், கனிமொழி எம்.பி, டாக்டர் எழிலன், முனைவர் டி.ஆர்.பி.ராஜா, மாணவர் அணிச் செயலாளர் வீரமணி உள்ளிட்ட பலர் பங்கேற்று, ஆதரவைத் தெரிவித்தார்கள். த.வெ.க. என்ன செய்தது?

இளைஞர்களும் மாணவர்களும் போராடிய போது, காவல் துறையைக் கொண்டு ஒடுக்கியது. கல்லூரிகளுக்குள் புகுந்து மாணவர் அமைப்புகளின் தலைவர்களை வேட்டையாடியது. மெரினா கடற்கரையில், மாணவர்கள் கூடி விடக் கூடாது என்பதற்காக, த.வெ.க அரசு கடற்கரைக்குப் பூட்டுப் போட்டது. பா.ஜ.க. அரசின் கோபத்திற்கு ஆளாக வேண்டுமே என்று, டெல்லி ஜந்தர் மந்தர் பக்கமே தலைகாட்டாமல், த.வெ.க.வினர் தெறித்து ஓடினர். இதே இடத்தில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு எதிராக, அண்ணா ஹசாரே உண்ணாவிரதம் இருந்தபோது, மேடையேறி ஆதரவு தெரிவித்தவர்தான் த.வெ.க. தலைவரான நடிகர் விஜய். இப்போது அவர் முதல்வராக இருக்கும் நிலையில், இளைஞர்கள்-மாணவர்களின் நீட் எதிர்ப்புப் போராட்டத்தை ஒடுக்குவதில்தான் கவனம் செலுத்தினார். ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலகுவது என முடிவான பிறகு, அதாவது போராட்டம் முடிவுக்கு வந்த நேரத்தில், பாலன் இல்லத்திற்கு அமைச்சர் ராஜ்மோகன் வந்தார். இளைஞர்களின் எதிர்ப்பை எதிர்கொண்டார்.

த.வெ.க. அரசு நீட் தேர்வுக்கு எதிராக இருப்பது போல பசப்புகிறது. நீட் தேர்வு எதிர்ப்புப் போராட்டங்களை முடக்குவதிலும், பா.ஜ.க. அரசுக்குப் பயந்து தன் கருத்தைத் தெரிவிக்காமல் வாய் பொத்திக்கொள்வதிலும் கவனமாக இருந்தது. அதன் இரட்டை வேடம் அம்பலமாகிவிட்டது. அதைத் திசைதிருப்பத் தான், 'நீட் எதிர்ப்புப் போராட்டத்தை தி.மு.க. தனதாக்கிக்கொள்ளப் பார்க்கிறது' என த.வெ.க. அமைச்சர்கள் ஒப்பாரி வைக்கிறார்கள். நீட் எதிர்ப்பிற்கான தொடர் செயல்பாடுகளிலும், நீட் தேர்வு ஒழிக்கப்பட வேண்டும் என்ற உறுதிப்பாட்டிலும் தி.மு.க.தான் என்றும் முதன்மையான இயக்கம்.

...வினா தொடரும்.

## கொல்லைப்புற வழியில் ஆர்.எஸ்.எஸ். கொள்கை!

தமிழ்நாடு அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கும் ஆர்.எஸ்.எஸ். வளர்ப்பான நிர்மல்குமார், சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசுகையில், "ஏன் பொறியியல், டாக்டர் படிப்புகளுக்காகக் காத்திருக்க வேண்டும். கார்பென்டர், பிளம்பர் வேலைகளுக்குச் செல்லலாமே" என்று தனது ஆரியச் சிந்தனையைக் கக்கியுள்ளார். சாதி - பொருளாதாரத்தில் பின்தங்கிய சமூகத்தின் உயர்வுக்காக உழைக்கவேண்டிய அமைச்சர், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சி கண்டு, தனது ஆர்.எஸ்.எஸ். வன்மத்தைக் கக்கியுள்ளதாகச் சமூக வலைதளங்களில் பலரும் விமர்சனங்களைச் செய்துள்ளனர். கபிலன் காமராஜ் என்பவரது பதிவில்...

"கார்பெண்டர், பிளம்பர், எலக்டீரிஷியன், வேலைக்கு அவ்ளோ டிமாண்ட் இருக்கு. அதைவிட்டுட்டு 4 வருஷம் இன்ஜினீயரிங் படிச்சுட்டு இருக்கானுங்க"

இந்த வசனத்தைப் பலரும் சொல்லிக் கேட்டுருப்பீங்க. அதுவும் வருஷம் தவறாமல், இன்ஜினீயரிங் சேர்க்கைக்கான கவுன்சிலிங் நடக்கறதுக்கு முன்னர், இதை யாரேனும் சொல்லுவது வழக்கமாகிவிட்டது. இதைக் கேட்டதும் உங்களுக்கும்கூட "அட, ஆமா!" எனத் தோணும்.

கடந்த 4 வருஷத்துல கார்பென்டர், பிளம்பர், எலக்ட்ரீஷியன் போன்றோரை எத்தனை முறை உங்க வீட்டுல வேலையிருக்குன்னு கூப்பிட்டு இருப்பீங்கன்னு யோசித்துப் பாருங்க. பலர் வீட்டில் சராசரியாக வருஷத்துக்கு ஒருமுறைகூட கூப்பிட்டு இருக்கமாட்டீங்க. அவ்ளோதான், அந்த முறைசாரா துறை (Unorganised Sector) வேலைகளுக்கான தேவை. தொழில் நிறுவனங்களிலும் அதன் தேவை மிகக் குறைவு. ஆயிரம் இன்ஜினீயர்கள் வேலை பார்க்கும் ஒரு கட்டடத்தில் 2 பிளம்பர், எலக்டீரிஷியன் கூட நிரந்தர முழு நேர வேலைக்கு இருக்கமாட்டார்கள். பெரும்பாலும், சொற்ப சம்பளத்தில் ஏதேனும் கான்ட்ராக்டரிடம்தான் வேலை பார்க்கணும்.

அதனால், 'இன்ஜினீயரிங் படிக்கறது வேஸ்ட்'னு யாராவது சொன்னால், சொன்னவரையும் அவர் சொல்வதையும் மதிக்காமல், இன்ஜினீயரிங் சேர்ந்து படித்து, வாழ்க்கையில வளம் பெறும் வழியைப் பாருங்கள்" என்று தனது கோபத்தைப் பதிவிட்டுள்ளார். குலக்கல்விக்கு எதிரான சிந்தனையை வீழ்த்திய தமிழ்நாட்டில், ஆரியம் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



பி.சரவணகுமார்



### தலைவரின் வாழ்த்து தந்த ஊக்கம்!

2012-ஆம் ஆண்டில், அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் நடைபெற்ற இளைஞர் அணி நிகழ்ச்சிக்கு வருகைதந்தார். கூட்டம் முடிந்த பின்னர், தலைவரைச் சந்தித்து மகிழ்ந்து புகைப்படம் எடுத்துக்கொண்டேன். "ஊக்கத்துடன் இருங்கள்" என்று தலைவர் வாழ்த்தியது என்றென்றைக்கும் என்னை இயக்கும்.

– பி.சரவணகுமார், 3-வது வார்டு செயலாளர்,
திருவில்லிப்புத்தூர், விருதுநகர் தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### 1961-மூன்றாவது பொது மாநாடு!

1961-ஆம் ஆண்டு ஜூலை மாதம், திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற கழகத்தின் மூன்றாவது பொது மாநாட்டையொட்டி, ஜூலை 12-ஆம் தேதி, காலை 10 மணிக்கு பொதுக்குழு கூடியது. பொருளாளர் கலைஞர் சமர்ப்பித்த அறிக்கை, பொதுக்குழுவில் வாசிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர், பேராசிரியர் க.அன்பழகன், கழகப் பிரச்சாரத்திற்குத் தனது முழு நேரத்தையும் செலவிடும் நோக்குடன், தாம் அதுவரை வகித்துவந்த தொழிற்சங்கச் செயலாளர் பதவியிலிருந்து அண்ணா அவர்களின் ஒப்புதலுடன் விலகிக்கொண்டார். அவைத் தலைவராக நாவலரும், கொள்கைப் பரப்புச் செயலாளராக சத்தியவாணி முத்துவும், தொழிற் சங்கச் செயலாளராக தோழர் ஏ.கோவிந்தசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## வலை யோசை



**Mugil Siva**

151 போனா போவுது. பிளம்பர், கார்ப்பென்டர் வேலை பாத்து பொழச்சுக்கலாம். ஜனநாயகன் 253 கோடி வசூலு. ப்ளாஸ்ட்டு ப்ளாஸ்ட்டு.



**Jayachandran**

சொல்லாமல் போவதற்குப் பெயர்தான் ஆய்வு, இரண்டு நாளுக்கு முன்பே விளம்பரப்படுத்திப் போவது, மக்களைக் கூட்டி ரீல்ஸ் எடுக்க, பிரச்சினைகளைத் திசைதிருப்ப.



**Sheik Abdullah**

குறுக்கே அணை கட்டப் போறான் - இங்க எந்த அணையிலும் தண்ணீர் இல்ல. தமிழ்நாட்டு வரலாற்றில் முதல்முறையா வந்தே மாதரம் பாடுறாங்க. அரிசி விலை - முட்டை விலை அதிகமாகிட்டே போகுது. 'எதாவது செய்ங்க'னு நாம கேட்டோம். 'தோ வர்றேன் இருங்க'னு மெட்ரோல சூட்டிங்க நடத்திட்டுப் போயிருக்கு நம்ம CM. நீங்க எந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கேட்டாலும், 'ரெண்டு Public Appearance - ரெண்டு கட்டிப்புடி பண்ணிட்டா போதும்'னு நினைக்கிறார் அவரு. மக்கள் தகுதிக்கேற்ற அரசுதான் அமையும்னு எங்கேயோ படிச்சது நியாபகம் வருது.



**Haraappan**

The realization phase
காவிரி நீர்
மேகதாது
இஸ்லாமியர் இடஒதுக்கீடு
தமிழ்த்தாய் வாழ்த்து அவமதிப்பு
துணை வேந்தர் நியமன அதிகாரம் ஆளுநருக்கு எழுதிக்கொடுத்தது
ஆந்திராவுக்குத் தொழில்கள் போவது
இன்றைய மருத்துவ சீட் பறிகொடுத்ததுவரை
விஜய் நடத்துவது அக்மார்க் RSS BJP proxy govt.



**Dharani Pradeep**

Cm சார், நீங்க டாடா காட்டுவது தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு. கொஞ்சம் ரீல்ஸ் மோடில் இருந்து, ரியல் அரசியல் செய்யப் பழகுங்கள்.




RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900